லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட

ஆண்டறிக்கை

2016

தூரநோக்கு

இலங்கை மக்களுக்கான மிகச் சிறந்த கவர்ச்சிகரமான போக்குவரத்து சேவைக்குப் பங்களிப்பு வழங்குதல்.

செயற்பணி

இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சொந்தமான பேருந்துகளை சலுகை விலையிலும் உயர் தரத்திலும் பழுதுபார்த்தல்.

வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் அலுவலகம்

சட்ட நிலைமை	- 2007 இன் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் ஆக்கப்பட்டுள்ளது.
கூட்டிணைக்கப்பட்ட திகதி	- 2001 ஒக்டோபர் 01
கம்பனி பதிவு இலக்கம்	**- PV21948**
அலுவலக முகவரி	- வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் அலுவலகம் இலக்கம் 73, மினுவன்கொடை வீதி, ஏக்கல, ஜா
தொலைபேசி இலக்கம்	- 0112236530 / 0112230458
மின்னஞ்சல் முகவரி	- lakdiwaengco@gmail.com

உள்ளடக்கம்

விபரம்		**பக்க இல.**
அறிமுகம்	…………………………………………………………………………	1
தலைவரின் செய்தி	………………………………………………………	2
அங்கத்தவர்கள்	………………………………………………………………	3
குறிக்கோள்கள்	………………………………………………………………	4
செயலாற்றுகை	……………………………………………… ………..	5-7
செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்	……………………………………………	8
வருடாந்த கணக்கு	…………………………………………………………	9-26
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	………………………	27-28
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்	……………………………	29
அறிக்கை பதில்கள்	……………………… …….. …….. …….. …………….	30

வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்

அறிமுகம்

1957 இன் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனுப் போக்குவரத்து சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த கௌரவ லெஸ்லி சைமன் குணவர்தன அவர்கள் 1970.11.20 ஆம் திகதி இலக்கம் 14933 கொண்ட வர்த்தமானி பத்திரிகையில் கட்டளை ஒன்றை வெளியிட்டதன் மூலம் ஓட்டோமொபைல் தனியார் (இலங்கை) லிமிடெட் எனும் பெயரில் இருந்த 24 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட காணியினை இலங்கை போக்குவரத்து சபையின் பயன்பாட்டிற்காக ஒப்படைத்து இந்த கம்பனியினை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

அதன் போது ஏக்கல மத்திய வேலை தளம் 1974.02.15 ஆம் திகதி அப்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமராக இருந்த கௌரவ சினிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்தே இந்த கம்பனி புதிய பேருந்து உடல் பாகம் பழுது பார்த்தல் போன்றே பழைய பேருந்துகளின் உடல் பாக பழுது பார்த்தல் அடிப்படை ரீதியில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலைத் தளம் இரு பிரிவுகளை கொண்டுள்ளதுடன், ஒரு வேலைத் தளம் மத்திய வேலைத்தளமாக செயற்பட்டதுடன், ஏக்கல வேலைத்தளம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமானதாகும்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் 1993.06.14 ஆம் திகதி இந்த இரு வேலைத் தளங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஏக்கல என்ஜினியரிங் நடவடிக்கைகள் தொடர்பான தனியார் கம்பனியாக தனியார் மயப்படுத்தப்பட்டது.

பின்னர் இந்த தனியார் கம்பனி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 400 கிரேட் வோல் பேருந்து செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அதற்கு அமைய 2001 ஆம் ஆண்டு தொடக்கம் போக்குவரத்து அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனமான தனியார் கம்பனியாக அது முகமைத்துவப்படுத்தப்பட்டது. மேலும் பொருளாதார மேம்பாட்டினை உருவாக்கும் நோக்கத்துடன் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொண்டு நாட்டிற்குத் தேவையான பேருந்து உடல்களை உருவாக்குவதற்கு இந்த கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது.

தலைவரின் செய்தி

2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வெளியிடுவதற்கான வாழ்த்துச் செய்தியையும் மற்றும் கருத்துக்களையும் தெரிவிப்பது எனது பாக்கியம் ஆகும். எனது ஒரே எதிர்பார்ப்பானது அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு நிறுவனத்தின் உற்பத்தியை மற்றும் வருமானத்தினை உயர்த்துவதாகும். அதே போன்று, ஊழியர்கள் முகம் கொடுத்துள்ள சிக்கல்களை மிக விரைவில் தீர்த்து உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் ஊக்குவிக்க முடியும் என்பது எனது எண்ணம் ஆகும். அதனை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வது எமது இலங்கை போக்குவரத்து சபையின் எதிர்பார்ப்பாகும். விசேடமாக நான் ஏனைய அரச அமைச்சு தலைவர்களை சந்தித்து அவர்களது அமைச்சுக்களுக்கு சொந்தமான வாகனங்களது பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் எமது கம்பனியின் மூலம் வழங்கப்படும் ஏனைய சேவைகளை மேற்கொண்டதுடன் எனது தொலைநோக்கானது லக்திவ நிறுவனத்தினை இலகுவாக கொண்டு செல்லக்கூடிய கம்பனியாக ஆக்குவதாகும். எனக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை போக்குவரத்து அமைச்சர் கௌரவ விமல் சிரிபால டி செல்வா, பிரதி அமைச்சர் அசோக்க அபேசிங்க அவர்கள் உள்ளிட்ட சிவில் விமான சேவை அமைச்சின் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதுடன் பணிப்பாளர் சபையும் மற்றும் முகாமைத்துவ தொகுதியினருக்கும் அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் கம்பனிக்குக் காட்டிய விசுவாசத்திற்கு நான் பாராட்டை தெரிவித்து எமது ஊழியர்கள் கம்பனிக்காக அவர்களது அர்ப்பணிப்பை மீண்டும் மீண்டும் நிரூபித்து உறுதியளித்தலுக்கு, எமது விலைமதிப்பற்ற கொள்வனவாளார்களுக்கு, வழங்குனர்களுக்கு மற்றும் வணிக பங்குதாரர்களுக்கு அவர்களது விலைமதிப்பற்ற பங்களிப்பு மற்றும் விசுவாசத்திற்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

பீ.ஆர்.எல். குணவர்த்தன
தலைவர்,
லக்திவ பொறியியல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
ஏக்கல, ஜா-எல

வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டடின் அங்கத்தவர்கள்

பணிப்பாளர் சபை	: திரு. பி.ஆர்.எல். குணவர்த்தன	– தலைவர்
	திரு. கே.எஸ்.எம். டி சில்வா	– பணிப்பாளர்
	திரு. சரத் எபா	– பணிப்பாளர்
	திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜெயசிங்க	– பணிப்பாளர்
	திரு. ஜி. அஜித் பிரியந்த	– பணிப்பாளர்
	திரு. ஹேமந்த ராஜபக்ஷ	– நிறுவன செயலாளர்
புதவியணியினர்	: திரு. கே.எஸ்.அனுர குமார	– பொறியியலாளர்
	திரு. ஜே.அமரதிவாகர	– நிர்வாக உத்தியோகத்தர்
	திரு. கயான் சந்திரசிரி	– கணக்காளர்
	திரு. மஞ்சுள சம்பத்	– கணக்கீட்டு உத்தியோகத்தர்
	திரு. எல். விஜேரத்ன	– வழங்கல் உத்தியோகத்தர்
	திரு. சஜித் ரவிந்திர	– தலைவதரின் செயலாளர்

குறிக்கோள்கள்

- இபோச பேரூந்து சேவைகளை பொதுமக்களுக்கு குறைந்த விலையிலும் உயர் தரத்திலும் வழங்குதல்

- பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கும் நோக்கில் திறமையான தொழிலாளர்களை மேம்படுத்துதல்.

- வாகன பரிசோதனை, ஓட்டுநர் மோட்டார் பொறிமுறை தொடர்பான பயிற்சி மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் வணிகத்தை மேற்கொள்ளுதல்.

- முகாமைத்துவ ஆலோசகர்கள், கூட்டு முயற்சி முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளாக சேவைகளை வழங்குதல்.

வ/ப லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டடின் 2016 ஆம் வருடத்தினுள் செயலாற்றுகை

கம்பனி நிர்வாகம்

வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் கம்பனியின் பணிப்பாளர் சபை, கம்பனி நிர்வாகத்தை உயர் தரத்தில் பேணிச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் பொறுப்பேற்கின்றது. வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டட்டினால் அதன் கம்பெனி நிர்வாக கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளது கம்பனியின் நீண்டகால பங்குதாரர்களின் பெறுமதியை உருவாக்குவதற்காக தமது தரப்பினருக்கு தமது பொறுப்புக்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி உள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக ஆகும்.

கம்பெனியின் பங்குதாரர்கள், ஊழியர்கள், வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அதனை செயற்படுத்தும் ஏனைய தரப்பினர் உள்ளிட்ட அதன் அனைத்து தரப்பினரதும் தேவைப்பாடுகளை அறிந்து கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கம்பனி நிர்வாக ஒழுங்கமைப்பினுள் கம்பனி சட்டத்தின் தேவைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கூற்றின் மூலம் சபையினால் பின்பற்றப்படும் கம்பனி நிர்வாகக் கொள்கைகள், பயன்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையானது பணிப்பாளர்கள் ஐந்து பேரைக் கொண்டுள்ளதுடன், அதில் ஒருவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக உள்ளதுடன், ஏனைய நால்வர் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.

வருடத்தினுள் சபையானது ஆகக் குறைந்தது நான்கு தடவைகள் கூடியுள்ளது. ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்னரும் கம்பனியின் செயலாற்றுகை, புதிய முதலீடுகள், மூலதன செயல் திட்டம் மற்றும் விசேட சபை அங்கீகாரம் தேவைப்படும் வேறு சிக்கல்கள் தொடர்பில் சபை பத்திரம் முன்கூட்டியே தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நிகழ்ச்சி நிரல் உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்கள் மற்றும் பின்புலம் என்பவை பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். கம்பனியின் ஏனைய பணிப்பாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் வெளித்தரப்பினர்களுடன் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணுதல், கொள்கை தொடர்பான காரணங்கள் தொடர்பில் தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மொத்த வணிக, செயற்பாடு மற்றும் மூலோபாய அபிவிருத்திக்காக அவர் பொறுப்பு கூற வேண்டும்.

மைல்கற்கள்


ஏக்கல மத்திய வேலைத்தளம் ஆரம்பிக்கப்பட் டது
1974
ஏக்கல பொறியியல் வேலைகள் தனியார் மயமாக்கப் பட்டது
1993
ஏக்கல எஞ்சினியரிங் வர்க்ஸ் பிறைவேட் லிமிட்டட்
2001
திருத்தம் செய்யப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
2014
இலாபம் ஈட்டத் தொடங்குதல்
2016

நிதி சிறப்பம்சங்கள்

வருமானம் (ரூபா. மில்லியன்)

ஆண்டு	2014	2015	2016
பழுதுபார்த்தல் வருமானம்	24	35	73



திருத்தம் செய்யப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை

ஆண்டு	2014	2015	2016
திருத்தம் செய்யப்படுகின்ற பேருந்துகள் (எண்ணிக்கை)	42	49	69



மொத்த சொத்துக்கள் (ரூபா. மில்)

ஆண்டு	2014	2015	2016
மொத்த சொத்துக்கள்	34	35	43



வரிக்குப் பின்னரான இலாபம் (ரூபா. மில்லியன்)

ஆண்டு	2014	2015	2016
வரிக்குப் பின்னரான இலாபம்	(4.04)	0	5.08



செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

நிதி அறிக்கையிடல்

இந்தச் செயன்முறையின் நம்பகத்தன்மை மற்றும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனான அதன் இணக்கப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவம் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுடன அதன் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது கம்பனியால் பின்பற்றப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமை குழுவால் மீளாய்வு செய்து கலந்துரையாடப்பட்டது.

இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகள்

குழுவினால் ஒவ்வொரு வணிகத் துறையிலும் எடுக்கப்பட்ட அல்லது கவனத்தில் கொள்ளப்பட்ட முக்கிய வணிக இடர்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை பெற்று மீளாய்வு செய்தது. குறிப்பாக கம்பனி, தொழிலாளர் பிரச்சனைகள், சம்பள அதிகரிப்பு போன்றவற்றால் கம்பனிக்கு ஏற்படும் நிதி தாக்கங்கள் குறித்து குழு ஆலோசித்து, சபையை தகுந்ததாக மதிப்பீடு செய்தது.

உள்ளகக் கணக்காய்வு

கம்பனியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்டது. குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களின் பரிந்துரைகளை முகாமைத்துவ பதில்களுடன் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டு சூழலை மேம்படுத்தும் வகையில் அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான முன்னேற்றம் தொடர்ந்து தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.

வெளியக கணக்காய்வு

கம்பனியின் விடயப் பரப்பு மற்றும் கணக்காய்வு உத்தி மற்றும் கம்பனியின் சுமூகமான செயற்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இடர் காரணிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கணக்கீட்டுகட குழு வெளியக கணக்காய்வாளர்களைச் சந்தித்தது.

முடிவுரை

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் என்பன மூலம் கம்பனியின் செயற்பாடுகள் குறிப்பிடப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க முகாமை செய்யப்படுகின்றன என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதுடன் கம்பனியின் சொத்துக்கள் போதுமானளவு பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றன என்பது தொடர்பில் கணக்காய்வுக் குழுவானது திருப்தியடைகின்றது.

ஒப்பம்
திரு. கே.எஸ்.எம்.டி சில்வா,
தலைவர்,
கணக்காய்வுக் குழு
2019-07-1

வருடாந்த கணக்கு 2016

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	31.12.2016 ரூபா.	31.12.2015 ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்		13,435,435	8,290,423
நிலையான வைப்பு		2,885,199	2,839,031
		16,320,634	11,129,454
நடைமுறை சொத்துக்கள்			
இருப்புக்கள்	4	15,493,432	16,272,702
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	5	10,486,133	4,904,195
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	6	728,076	2,356,376
காசு மற்றும் காசுக்கு சமமானவை	7	50,095	30,000
		26,757,736	23,563,273
மொத்த சொத்துக்கள்		43,078,370	34,692,727
உரிமம் மற்றும் பொறுப்புக்கள்			
உரிமை			
கூறப்பட்ட மூலதனம்	8	20	20
மூலதன ஒதுக்கம்		33,293,621	33,293,621
திரண்ட ஒதுக்கம்		(15,582,459)	(20,668,325)
		17,711,182	12,625,316
நடைமுறையல்லாத பொறுப்பு			
ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை	9	18,109,704	2,365,893
நடைமுறை பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய வியாபார மற்றும் ஏனையவைகள்	10	3,667,200	17,585,129
வங்கி மேலதிகப்பற்று		3,590,284	2,116,389
		7,257,484	19,701,518
மொத்த உரிமம் மற்றும் பொறுப்புக்கள்		43,078,370	34,692,727

01 முதல் 21 வரையிலான கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டது.

தலைவர்	இயக்குனர்	கணக்காளர்
CHAIRMAN GOVERNMENT OWNED LAKDIVA ENGINEERING CO. (PVT) LTD EKALA, JA-ELA.	Director LAKDIWA ENGINEERING COMPANY (PVT) LTD No. 73, Minuwangoda R... Ekala, Jaela	Accountant Government owned LAKDIVA ENGINEERING COMPANY (PVT) LTD

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று

	குறிப்பு	2016	2015
		ரூபா.	ரூபா.
வருமானம்	11	73,340,474	34,657,779
விற்பனை கிரயம்	12	(64,569,598)	(37,904,747)
மொத்த நட்டம்		8,770,876	(3,246,968)
ஏனைய வருமானம்	13	24,512,359	22,566,326
		33,283,235	19,319,358
நிர்வாக செலவினங்கள்	14	(27,474,024)	(18,980,529)
விநியோக கிரயங்கள்	15	(672,127)	(126,269)
நிதி கிரயங்கள்	16	(51,218)	(212,152)
வரிக்கு முன்னரான இலாபம்		5,085,866	408
வருமான வரி செலவினம்	17	-	-
வரிக்குப் பின்னரான இலாபம்		5,085,866	408
ஏனைய விரிவான வருமானம்		-	-
காலப் பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்		5,085,866	408

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

	கூறப்பட்ட மூலதனம்	மூலதன ஒதுக்கம	திரண்ட ஒதுக்கம்	மொத்தம்
	ரூபா.	ரூபா.	ரூபா..	ரூபா.
2014 ஜனவரி 1 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(16,619,812)	16,673,829
ஆண்டிற்கான நட்டம்	-	-	(4,048,921)	(4,048,921)
2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(20,668,733)	12,624,908
ஆண்டிற்கான இலாபம்	-	-	408	408
2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(20,668,325)	12,625,316
ஆண்டிற்கான இலாபம்	-	-	5,085,866	5,085,866
2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	20	33,293,621	(15,582,459)	17,711,182

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	2016 ரூபா.	2015 ரூபா.
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்		
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	5,085,866	408
சீராக்கங்கள்:		
பணிக்கொடை	16,736,021	1,177,387
வட்டி வருமானம்	-	(159,150)
தொழிற்படு மூலதன சீராக்கங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்).	21,821,887	1,018,645
தொழிற்படு மூலதன சீராக்கங்கள்:		
இருப்புகளில் ஏற்பட்ட குறைவு	779,270	3,389,376
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் (அதிகரிப்பு)/குறைவு	(5,581,938)	(3,122,420)
வைப்புக்கள் மற்றும் முற்பணங்களில் குறைவு/(அதிகரிப்பு)	1,628,300	336,550
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு/(குறைவு)	(13,917,929)	1,244,355
	(17,092,297)	1,847,861
செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசு	4,729,589	2,866,506
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(992,210)	(1,241,855)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கிய/(பயன்படுத்திய) தேறிய காசு	3,737,379	1,624,651
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(5,145,012)	(1,164,594)
நிலையான வைப்புகளில் முதலீடு	(46,168)	(159,150)
பெறப்பட்ட வட்டி	-	159,150
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	(5,191,180)	(1,164,594)
காசு மற்றும் காசிற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு).	(1,453,800)	460,057
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	(2,086,389)	(2,546,446)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவை	(3,540,189)	(2,086,389)
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	50,095	30,000
வங்கி மேலதிகப்பற்று	(3,590,284)	(2,116,389)
	(3,540,189)	(2,086,389)

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புக்கள்

1. பொதுவான தகவல்

1.1 அமைப்பு மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பு

வ/ப லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு செயற்படும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல எனும் இடத்தில் அமைந்துள்ளதுடன், பிரதான வர்த்தக இடமும் அதே இடத்தில் அமைந்துள்ளது.

கம்பனி 2001 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டது.

1.2 முதன்மை செயற்பாடு மற்றும் செயற்பாட்டின் தன்மை

கம்பனியானது இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளை பழுதுபார்க்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறது.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2016 திசெம்பர் 31 இல் கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 89 ஆக காணப்பட்டது. (2015 திசெம்பர் 31 – 75)

1.4 நிதிக்கூற்றுக்களின் அங்கீகாரம்

இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2018 செப்டெம்பர் 19 ஆம் திகதி வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. தயாரிப்பின் அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRS) இணங்கவும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 அளவீட்டின் அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரய முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3 ஒப்பீட்டு பெறுமதி

நடப்பாண்டில் சமர்ப்பிப்பிற்கு ஏற்ற வகையில் முன்னைய ஆண்டின் புள்ளிவிபரங்கள் முக்கிய தகவல்கள் தேவையான இடத்தில் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 செயற்பாட்டு மற்றும் சமர்பித்தல் நாணய அலகு

கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் அளவிடப்படுவது, கம்பனி செயற்படுகின்ற முதன்மைப் பொருளாதார நாணய அலகின் மூலமாக உள்ளதுடன் (செயற்பாட்டு நாணயம்) கிட்டிய ரூபாய் பெறுமதிக்கு எடுக்கப்படுகிறது.

இநத் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவது கம்பனியின் செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணய வகையான இலங்கை ரூபாயில் (ரூபா.) ஆகும்.

2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்களின் பயன்பாடு

SLFRS இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முகாமைத்துவத்தினால் கணக்கீட்டுக் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் என்பவற்றை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். இந்த மதிப்பீடுகளிலிருந்து உண்மையான முடிவுகள் வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும் மற்றும் பாதிக்கப்படும் எந்தவொரு எதிர்கால காலங்களிலும் இனங்காணப்படுகின்றன.

2.6 பொருண்மை தன்மை மற்றும் திரட்சித் தன்மை

அனைத்து சமமான பொருண்மை உருப்படி வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படுகின்றன. சமனற்ற தன்மை கொண்ட உருப்படிகள் அல்லது செயற்பாடுகள் பொருண்மையற்றவையாகக் கருதப்படுமானால் மட்டும் அவை தனித்தனியாகக் காட்டப்படும்.

3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட SLFRS இற்கு இணங்க தயாரிக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முதன்மை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

3.1 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் / நாணய மாற்று

வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள், அந்த கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் தினத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும். நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்படும் தினத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பெயரிடப்பட்டுள்ள நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அந்த தினத்தில் நாணயமாற்று வீத தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும். அந்நிய செலாவணி அடிப்படையில் எழும் வெளிநாட்டு நாணய மாற்று வித்தியாசம் இலாபம் அல்லது நட்டத்தினுள் இனம் காணப்படும். வரலாற்றுக் கிரயத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற தினத்தில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படும்.

.

சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலைமை பற்றிய கூற்றில் நடைமுறை சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களானது, கம்பனியின் வணிகத்தின் இயல்பான செயற்பாட்டு சுழற்சியின் போது அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மிகக் குறுகிய காலத்தில் காசாக மாற்றக்கூடிய சொத்துக்கள் ஆகும். நடைமுறை சொத்துக்களைத் தவிர ஏனைய சொத்துக்களாவன நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அப்பால் கம்பனி வைத்திருக்க விரும்புபவை ஆகும

.
.

3.2 நிதி நிதி அல்லாத சொத்துக்களின் இழப்பீடு

அனைத்து அறிக்கையிடல் திகதியிலும், அந்த சொத்துக்களில் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை தீர்மானிப்பதற்காக நிதி அல்லாத சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். இழப்பீடு ஏற்படக்கூடும் என்பதற்கு ஏதேனும் அறிகுறி இருக்குமானால், தாக்கத்திற்கு உள்ளான ஏதேனும் சொத்தில் (அல்லது குறித்த சொத்து தொகுதியில்) அறவிடப்படக் கூடிய தொகையினை மதிப்பீடு செய்து அதன் கொள்ளளவு பெறுமதியுடன் ஒப்பீடு செய்யப்படும். மதிப்பீடு செய்யப்பட்ட அளவிடப்படக் கூடிய தொகை குறைவாக இருக்குமாயின், கொள்ளளவு பெறுமதி அதன் மதிப்பீடு செய்யப்பட்ட அறவிடப்படக் கூடிய பெறுமதி வரையிலும் குறைக்கப்படுவதுடன், இழப்பீட்டின் இலாபம் அல்லது நட்டம் உடனடியாக இனம் காணப்படும்.

பொதுவாக, அனைத்து அறிக்கையிடல் திகதியிலும், ஒவ்வொரு இருப்பு உருப்படியிலும் (அல்லது ஒரே மாதிரியான உருப்படி தொகுதி) கொள்ளளவு பெறுமதி அதன் விற்பனை விலை கிரயத்தில் இருந்து குறைக்கப்பட்டு இழப்பீட்டிற்காக மதிப்பீட்டை பூரணப்படுத்துவதற்காக விற்பனையுடன் ஒப்பீடு செய்யப்படும். ஏதேனும் இருப்பு உருப்படியொன்று (அல்லது அதற்கு சமமான உருப்படி தொகுதியொன்று) இழப்பீடு ஏற்பட்டிருக்குமாயின், அதன் கொள்ளளவு பெறுமதி விற்பனை விலை கிரயம் வரையில் குறைக்கப்பட்டு பூரணப்படுத்துவதற்காக விற்பனை செய்ய நேரிடுவதுடன், இலாபம் அல்லது நட்டத்தினுள் இழப்பீட்டு நட்டம் உடனடியாக இனம் காணப்படும்.

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான விளக்கக் குறிப்புக்கள் தொடர்ச்சி.

3.3 நிதிக் கருவிகள்

நிதிச் சொத்துக்கள்

3.3.1 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் அடிப்படையில் இனம் காணப்படுவது கொடுக்கல் வாங்கல் விலையில் ஆகும். வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் அடிப்படையில் இனம் காணப்படுவது கொடுக்கல் வாங்கல் விலையில் ஆகும். பெரும்பாலான விற்பனைகள் இடம் பெறுவது பொதுவான கடன் நிபந்தனைகளின் அடிப்படையிலாக உள்ளதுடன் பெறவேண்டியவைகளுக்காக வட்டி பெற்றுக் கொள்ளப்படாததுடன் பெறவேண்டிய தொகை கழிவு செய்யப்படாத அளவில் பெறுமதியிடப்படும். பொதுவான கடன் நிபந்தனைகளின் அப்பால் கடன் நீடிக்கப்படும் போது, பெறப்பட வேண்டிய தொகை பலன் தரும் வட்டி முறைமையைப் பயன்படுத்தி மாற்றி அமைக்கப்பட்ட செலவின் அடிப்படையில் அளவீடு செய்யப்படும். ஒவ்வொரு அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதியிலும், பணத்தினை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதற்கு ஏதேனும் புறநிலை சாட்சிகள் இருக்குமா என்பதனைத் தீர்மானிப்பதற்காக வியாபாரம் பெற வேண்டியவைகளின் கொள்ளளவு பெறுமதி மீளாய்வு செய்யப்படும். அவ்வாறாயின், இழப்பீட்டு நட்டமானது இலாபம் அல்லது நட்டத்தினுள் உடனடியாக இனம் காணப்படும்.

3.3.2 நிதி சொத்துக்களின் இழப்பீடு

ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படாத நிதிச் சொத்துக்களின் அளவில் இழப்பீடு தொடர்பான புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதனைத் தீர்மானிப்பதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. அவ்வாறாயின், இலாபம் அல்லது நட்டத்தினுள் இழப்பீட்டு நட்டம் உடனடியாக இனம் காணப்பட்டு அதற்கு அமைய நிதிச் சொத்துக்களின் கொள்ளளவு பெறுமதி குறைக்கப்படும்.

3.3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவை

காசு மற்றும் காசிற்கு சமமானவையில் கையிலுள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான அசல் முதிர்வுகளுடன் கூடிய ஏனைய குறுங்கால அதிக திரவத்தன்மையுடைய முதலீடுகள் ஆகியவை உள்ளடங்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றுக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்று ”நேரில் முறையை” பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

.

நிதிப் பொறுப்புக்கள்

3.3.4 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையில் (கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் உள்ளடங்கலாக) இனங்காணப்படுகின்றன. வியாபார செலுத்த வேண்டியவை சாதாரண கடன் விதிமுறைகளின் அடிப்படையில் கடப்பாடுடையவையாக உள்ளதுடன் வட்டியை ஏற்கப்படுவதில்லை. வட்டியை ஏற்றுக் கொள்ளும் பொறுப்புக்கள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி மாற்றப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

3.3.5 வங்கி மேலதிகப்பற்றுக்கள்

மேலதிகப்பற்றுக்கள் கோரிக்கைக்கேற்ப முழுமையாக திருப்பிச் செலுத்தப்படக்கூடியதும் மற்றும் ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் முகப்பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன.

பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களானது, கோரிக்கையின் பேரில் செலுத்துவதற்கு அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களாகும். நடைமுறையல்லாத பொறுப்புக்களானது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டிய மீதிகளாகும்.

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக கம்பனிக்கு சட்டப்பூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடொன்று உள்ள போது ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அந்தப் பொறுப்பைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலொன்று தேவையாக உள்ளது.

3.4 ஓய்வூதிய நலன் கிரயங்கள்

கம்பனிக்கு தீர்மானமான நலன்கள் மற்றும் வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் எனும் இரண்டும் உள்ளது. வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது கம்பனியினால் வேறு நிறுவனத்திற்கு நிலையான அங்கத்துவ பணம் செலுத்தும் ஓய்வூதிய திட்டமாக உள்ளதுடன் அனைத்து ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு போதிய அளவு சொத்துக்கள் நிதியத்திடம் இல்லையாயின் என் தற்போதைய மற்றும் முன்னைய கால பகுதிகளில் ஊழியர்களது சேவையில் மேலதிக பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் இல்லை. தீர்மானமான நலன் திட்டம் என்பது நிச்சயமான பங்களிப்பு திட்டம் ஒன்று இல்லாத ஓய்வூதிய திட்டம் ஆகும். பொதுவாக நிச்சயமான நலன் திட்ட ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் பெறும் போது கிடைக்கும் ஓய்வூதிய நலன் அளவானது பொதுவாக வயது, சேவை காலம் மற்றும் நட்ட ஈடு போன்ற காரணிகளில் ஒன்று அல்லது பலவற்றின் அடிப்படையில் தங்கி உள்ளது.

(அ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம்

- ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே. நி.)மற்றும்
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ஊ.ந.பொ.நி.)

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றின் அங்கத்துவ தொகைக்கு தகுதி பெறும் அனைத்து ஊழியர்களும் குறித்த சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க உரிய பங்களிப்புத் தொகைகளில் பாதுகாக்கப்படுவர்.

(ஆ) வரையறை செய்யப்பட்ட நலன்கள் திட்டம் - ஓய்வூதிய நலன் பொறுப்பு - பணிக்கொடை

ஊழியரது சேவையின் முதலாவது வருடம் தொடக்கம் ஓய்வூதிய நலன் கடப்பாடிற்கு கணக்குகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பிற்போடப்பட்ட பொறுப்புகளின் கீழ் இந்த உருப்படி குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய, ஊழியருக்கு பொறுப்பு எழுவது ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மட்டுமே ஆகும். பணிக்கொடைக்காக வெளியாகத்தில் இருந்து நிதி வழங்கப்படுவது இல்லை.

3.5 நிகழத்தக்கவைகள் மற்றும் மூலதன கடப்பாடுகள்

அறிக்கையிடல் திகதியில் இருக்கும் அனைத்து பொருண்மையான மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள் நிதிக்கூற்றுக்களிற்கான அந்தந்த குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

விரிவான வருமானக் கூற்று

3.6 வருமானத்தை இனம் காணுதல்

கம்பனிக்கு பொருளாதார பெறுபேறு பாய்தல் நிகழும் அளவிற்கு வருமானம் இனம் காணப்பட்டுள்ளதுடன், வருமானம் மற்றும் அது தொடர்பான கிரயம் அல்லது ஏற்க நேரிடும் என நம்பகமாக அளவிட முடியும். கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய கருத்தில் கொள்ளும் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவீடு செய்யப்படும்.

(அ) பழுதுபார்த்தல் வருமானம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளைப் பழுதுபார்ப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம், சேவைகளை நிறைவு செய்ததன் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படுகின்ற காலப்பகுதியில் இனங்காணப்பட்டு வழங்கப்பட்ட உண்மையாக மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

(ஆ) வட்டி

பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் இனங்காணப்படுகிறது.

3.7 செலவினத்தை இனங்காணுதல்

வணிகத்தை நடாத்துவதற்கும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை செயற்திறனுள்ள நிலையில் பராமரிக்கும் போது ஏற்படும் அனைத்து செலவினங்களும் ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டத்தை பெற்றுக் கொள்வதில் வருமானத்திற்கு அறவிடப்படுகின்றன.

3.8 நிதிக் கிரயங்கள்

கடன் பெறுதல் தொடர்பாக ஏற்படும் அனைத்து வட்டி மற்றும் ஏனைய கிரயங்கள் நிதிக் கிரயங்களின் ஒரு பகுதியாக செலவிடப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

	குறிப்பு	31.12.2016 ரூபா.	31.12.2015 ரூபா.
6 இருப்புக்கள்			
முடிவுறா வேலை		5,336,112	1,670,009
உதிரிப் பாகங்கள்		10,157,320	14,596,046
எரிபொருள் இருப்பு		-	6,647
		15,493,432	16,272,702
7 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்			
வியாபார கடன்பட்டோர்		10,486,133	4,858,027
வட்டி		-	46,168
		10,486,133	4,904,195
6 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
வைப்புக்கள்		-	4,000
முற்பணங்கள்	6.1	728,076	2,352,376
		728,076	2,356,376
6.1 முற்பணங்கள்			
விழா முற்பணங்கள்		725,076	405,376
சம்பள நிலுவைகளுக்கான முற்பணம் (பணிபுரியும் ஊழியர்கள்)		3,000	1,693,000
சம்பள நிலுவைகளுக்கான முற்பணம் (ஓய்வுபெற்ற ஊழியர்கள்)		-	254,000
	6	728,076	2,352,376
7 காசு மற்றும் காசிற்கு சமமானவை			
சிறுசெலவு காசு		50,095	30,000
8 கூறப்பட்ட மூலதனம்			
வழங்கப்பட்ட மற்றும் முழுமையாக செலுத்தி நிறைவு செய்யப்பட்ட சாதாரணப் பங்குகள் 2		20	20
9 ஓய்வூதிய நலன் கடப்பாடு - பணிக்கொடை			
ஆண்டின் ஆரம்ப ஏற்பாடு		2,365,893	2,430,361
ஆண்டுக்கான ஏற்பாடு		16,736,021	1,177,387
		19,101,914	3,607,748
ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்		(992,210)	(1,241,855)
ஆண்டின் இறுதி ஏற்பாடு		18,109,704	2,365,893

	குறிப்பு	31.12.2016	31.12.2015
		ரூபா..	ரூபா.

10 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள

வியாபார கடன் தருநர்		-	840,292
அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவை	10.1	3,667,200	16,744,837
		3,667,200	17,585,129

10.1 அட்டுறு செலவினங்கள் மற்றும் ஏனையவைகள்

சம்பளம் மற்றும் கூலிகள்		1,348,061	977,444
ஊழியர் சேமலாப நிதியம்		-	520,832
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	-	70,763	
மேலதிகநேரம்		-	77,740
ஊக்குவிப்பு படி		194,767	95,103
ஒப்பந்த கூலிகள்		269,856	179,122
வாகன படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		50,000	20,000
தொலைபேசி படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		4,250	-
எரிபொருள் படி - தலைவர் மற்றும் பணிப்பாளர்கள்		16,150	10,766
ஊழியர் நலன்புரி சங்கம் - ஏக்கல		8,200	6,300
ஊழியர் நலன்புரி சங்கம் - இலங்கை போக்குவரத்து சபை		1,400	1,400
ஊழியர் நலன்புரி சங்கம் - லக்திவ		9,400	7,000
தண்டப்பண நிதியம்		104,071	43,781
சுங்கம்		16,805	8,805
ஊழியர் கடன்கள் (வங்கி கடன்கள்)		385,734	375,064
கணக்காய்வு கட்டணங்கள்		69,990	109,990
தொலைபேசி		11,773	8,342
மின்சாரம்		115,885	205,275
பாதுகாப்பு		224,800	187,360
முத்திரை கட்டணம்		-	2,420
நிலுவை சம்பளங்கள் மற்றும் முற்பணம் (பணிபுரியும் பதவியணியினர்)		-	10,512,055
நிலுவை சம்பளங்கள் மற்றும் முற்பணம் (ஓய்வுபெற்ற ஊழியர்கள்)		-	1,958,737
நிலுவை ஊழியர் சேமலாப நிதியம்		686,054	859,411
நிலுவை ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்		93,293	181,350
பிடித்துவைத்தல் வரி		-	5,374
சிற்றுண்டிச்சாலை வைப்புக்கள்		-	10,000
மீளச்செலுத்திய கேள்வி வைப்பு		40,000	276,692
இலங்கை போக்குவரத்து சபையின் தலைமை அலுவலகம்		16,711	33,711
	10	3,667,200	16,744,837

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி.

	குறிப்பு	2016 ரூபா.	2015 ரூபா.
11 வருமானம்			
பழுதுபார்த்தல் வருமானம்		73,340,474	34,648,919
கழிவு விற்பனை		-	8,860
		73,340,474	34,657,779
12 விற்பனைக் கிரயம்			
ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுறா வேலை		1,670,009	2,593,579
உற்பத்தி கிரயம்	12.1	68,235,701	36,981,177
ஆண்டின் இறுதியில் முடிவுறா வேலை		(5,336,112)	(1,670,009)
		64,569,598	37,904,747
12.1 உற்பத்திக் கிரயம்			
நேரடிப் பொருட்களை		27,718,329	10,985,171
நேரடி உழைப்பு	12.1.1	26,907,434	19,635,312
ஊழியர் சேமலாப நிதியம்		2,495,424	2,151,132
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்		623,856	537,783
பேருந்து பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் (வெளியக)		7,361,306	2,707,230
ஊக்குவிப்பு படி		3,129,352	964,549
	12	68,235,701	36,981,177
12.1.1 நேரடி உழைப்பு			
சம்பளம் மற்றும் கூலிகள்		16,899,994	8,735,358
நிலுவை சம்பளங்கள்		34,390	282,936
படி		2,330,000	4,787,280
வாழ்க்கைச் செலவு படி		4,836,000	4,264,728
மேலதிகநேரம்		312,474	158,796
ஒப்பந்த கூலிகள்		2,845,064	1,544,091
	12.1	26,907,434	19,635,312

	குறிப்பு	2016 ரூபா.	2015 ரூபா.
13 ஏனைய வருமானம்			
திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியம்		24,000,000	22,000,000
பயணிகள் போக்குவரத்து		420,549	354,176
கிரேட்வோல் உதிரிப் பாகங்கள்		-	3,938
வட்டி		-	159,150
கேள்விக் கட்டணங்கள்		5,000	3,000
நானவிதம்		31,444	46,062
கழிவு விற்பனை		5,866	-
வழங்குநர் பதிவு வருமானம்		49,500	-
		24,512,359	22,566,326
14 நிர்வாகச் செலவினங்கள்			
சம்பளம் மற்றும் கூலிகள்	14.1	8,732,923	7,572,447
பணிப்பாளர்களின் சம்பளம்	14.2	1,335,633	315,243
ஊழியர் சேமலாப நிதியம்		1,551,241	1,195,783
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்		387,810	298,946
படி		1,538,587	2,575,926
பதிவழிக்கப்பட்ட செலுத்த வேண்டிய மீதி	14.3	(14,187,676)	-
பதிவழிக்கப்பட்ட பெறவேண்டிய மீதி	14.4	1,957,647	-
பணிக்கொடை		16,736,021	1,177,387
புதவியணியினர் நலன்புரி		142,804	23,887
மருத்துவ செலவினங்கள்		-	2,390
மின்சாரம்		1,276,127	923,513
தொலைபேசி		118,728	95,091
வீத வரிகள் மற்றும் வரிகள்		85,080	150,458
காப்புறுதி		44,217	2,389
பாதுகாப்பு சேவை		3,954,200	3,501,340
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு		2,054,130	122,384
எரிபொருள்		815,961	499,930
காகிதாதிகள்		263,138	143,176
மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்		10,000	-
உடன்படிக்கைக் கட்டணங்கள்		12,141	-
தபால் கட்டணம்		4,128	2,890
கணக்காய்வுக் கட்டணங்கள்		100,000	69,990
செயலகக் கட்டணங்கள்		75,000	45,000

	குறிப்பு	2016	2015
		ரூபா.	ரூபா.

14 நிர்வாகச் செலவினங்கள் தொடர்ச்சி.

சட்ட கட்டணங்கள்		47,708	84,500
தண்டப் பணம் மற்றும் மிகைக் கட்டணம் - ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம		7,572	80,936
அன்பளிப்பு		5,000	-
சுகாதாரம்		128,711	91,989
நானாவிதம்		243,041	4,934
விளம்பரம் மற்றும் பிரசித்தப்படுத்தல்		34,152	-
		27,474,024	18,980,529

14.1 சம்பளம் மற்றும் கூலிகள்

சம்பளம் மற்றும் கூலிகள்		5,974,911	5,131,999
சம்பள நிலுவைகள்		8,495	159,789
வாழ்க்கைச் செலவு படி		2,704,780	2,238,600
மேலதிகநேரம்		70,612	108,593
கழி செலுத்தப்படாத சம்பளம்		(25,875)	(66,534)
	14	8,732,923	7,572,447

14.2 பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள்

எரிபொருள் படி		193,800	107,993
ஏனைய படி		1,073,000	197,333
தொலைபேசி கட்டணங்கள்		53,833	9,917
பணிப்பாளர்களின் போக்குவரத்துக் கட்டணம்		15,000	-
	14	1,335,633	315,243

14.3 பதிவழிக்கப்பட்ட செலுத்த வேண்டிய மீதி

செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய நிலுவைகள்		859,411	859,411
செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய நிலுவைகள்		181,350	181,350
நிலுவை சம்பளங்கள் மற்றும் கூலிகள் - பணிபுரியும் ஊழியர்கள்		10,512,055	10,512,055
நிலுவை சம்பளங்கள் மற்றும் கூலிகள் - ஓய்வுபெற்ற ஊழியர்கள்		1,958,737	1,958,737
பிடித்துவைத்தல் வரி		5,374	5,374
சிற்றுண்டிச்சாலை வைப்பு		10,000	10,000
மறுக்கப்பட்ட காசோலை		276,692	276,692
வியாபார கடன்கொடுத்தோர்		306,317	306,317
செலுத்த வேண்டிய மேலதிகநேரம்		77,740	77,740
		14,187,676	14,187,676

	குறிப்பு	2016 ரூபா.	2015 ரூபா.

14.4 பதிவழிக்கப்பட்ட பெறவேண்டிய மீதி

ஓய்வுபெற்ற ஊழியர் சம்பள நிலுவைகளுக்கான முற்பணம்	254,000	254,000
பணிபுரியும் ஊழியர் சம்பள நிலுவைகளுக்கான முற்பணம்	1,693,000	1,693,000
நீதிமன்ற வைப்பு	4,000	4,000
எரிபொருள் இருப்பு	6,647	6,647
	1,957,647	1,957,647

15 விநியோக கிரயங்கள்

பிரயாணம் மற்றும் போக்குவரத்து	72,127	38,269
வாகன வாடகை	600,000	88,000
	672,127	126,269

16 நிதி கிரயங்கள்

வங்கி மேலதிகப்பற்று வட்டி	34,218	168,714
வங்கி கட்டணங்கள்	17,000	43,438
	51,218	212,152

17 வருமான வரிச் செலவினம்

வருமான வரிச் செலவினம்	-	-

18 அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னரான நிகழ்வுகள்

நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவையான அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் எதுவும் இல்லை.

19 நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் மூலதன கடப்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்று திகதியில் உள்ளவாறு பொருண்மையான நிகழத்தக்க பொறுப்புக்கள் அல்லது மூலதன கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனதுஇலக்கம்: CTP/A/LEC/FA/06/2016/05 2019 ஏப்ரல் 03

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
பங்குதாரர்களுக்கு.

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவச் சபை பொறுப்பாக உள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது விபரமான பட்டியல்கள் காணப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 13,435,435 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத் தன்மையை சரிபார்க்க முடியாதிருந்தது. மேலும், LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வெளிப்படுத்தல் தேவைப்பாட்டின் பிரகாரம் அவற்றுக்கான பெறுமானத்தேய்வை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 15,493,432 தொகையான இருப்பின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத்தன்மையை சரிபார்ப்பதற்கு என்னால் முடியாதிருந்தது. மேலும், கம்பனியானது LKAS 2 - இருப்புக்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அசைவற்ற இருப்புக்கள் மீதான நட்டங்களை இனங்காண்பதற்கு தவறியிருந்தது.

(இ) கிறேட்வோல் பஸ் செயற்திட்டத்திற்காக 1993 ஆம் ஆண்டில் ரூபா 12,970,875 தொகையான இருப்புக்களை கம்பனி பெற்றிருந்த போதிலும், அத்தகைய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவ் இருப்புக்களின் உள்ளதன்மை மற்றும் பெறுமதி கணிப்பீடு தொடர்பான போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை அல்லது இருப்பு மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவதற்கு கம்பனி தவறியிருந்தது.

(ஈ) நிர்வாகச் செலவினத்திற்கு எதிராக அட்டுறுச் செலவினங்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய பணம், சிற்றுண்டிச்சாலை வைப்புக்கள், திருப்பி அனுப்பிய காசோலைகள் ம்றும் வியாபார கடன் கொடுத்தோருக்கான முறையே ரூபா 13,594,667, ரூபா 10,000, ரூபா276,692 மற்றும் ரூபா 306,317 கம்பனியால் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக நிர்வாகச் செலவினம் ரூபா 14,187,676 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வருமான வரி, பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்காக கம்பனி பதிவு செய்திருக்கவில்லை.

மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை

ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும், கம்பனியால் முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை என்பதும் எனது அபிப்பிராயம் ஆகும்.

பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்

அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச். எம். காமினி விஜேசிங்ஹ,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

MINISTRY OF TRANSPORT & HIGHWAYS
LAKDIVA ENGINEERING COMPANY (PVT) LTD.
NO. 73, MINUWANGODA ROAD, EKALA, JA-ELA, SRI LANKA
Tel: 011-2236530, 2236458 Fax: 011-2236764 E-mail -lakdiwaengco@gmail.com

LEC/AC/AQU/01/2016

2019/05/20

கணக்காய்வு அத்தியட்சகர்,
கணக்காய்வாளர் திணைக்களம்,
இல.306/72, பொல்துவ வீதி,

பத்தரமுல்ல.

C/S லக்திவா பொறியியல் (தனியார்) நிறுவனம் 31 டிசம்பர் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகள் 2019/04/03 தேதியிட்ட ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையுடன் தொடர்புடையது. – CTP/A/LEC/FA/2016/05.

கருத்துக்கான அடிப்படை

(அ) ஏற்றுக்கொள். எதிர்காலத்தில், நான் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் சொத்து மற்றும் உபகரணங்களின் தேய்மானம் குறித்த விரிவான துணைப் பதிவேட்டைப் பராமரிப்பேன்.

(ஆ) ஏற்றுக்கொள். எதிர்காலத்தில் நிறுவனத்தின் பொருட்களின் உடல் சரிபார்ப்பை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

(c) ஏற்றுக்கொள். பொருட்களின் இருப்பு மற்றும் அவற்றின் மதிப்பீடு பற்றிய பொருட்களின் ஆவணங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்க நான் வேலை செய்கிறேன்.

(ஈ) ஏற்கவும். எதிர்காலத்தில் தவறுகளை திருத்த நடவடிக்கை எடுப்பேன்.

(இ) ஏற்றுக்கொள். எதிர்காலத்தில் உரிய வரிகளை செலுத்துவதற்கு பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

பி.ஆர்.எல் குணவர்தன
தலைவர்
C/S லக்திவா பொறியியல் (தனியார்) நிறுவனம்
ஏகல
ஜா-அலா